ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2073/2- 2018 මැයි 28 වැනි සඳුදා - 2018.05.28
2073/2 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : க/எம்ரீஜீ/16/647.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில், மதுகம பிரதேச செயலாளர் பிரிவில், இல. 773ஏ, வலகெதர தெற்கு கிராம அலுவலர் பிரிவில், வலகெதர கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2017.01.30ஆந் திகதிய ஆரம்ப வரைபட இல. க 4634 இல் குறிப்பிடப்பட்ட 0.0127 ஹெக்டயார் வீஸ்தீரணமான காணித்துண்டின் விபரங்கள் கீழ்வருமாறு :

01. **துண்டு இல. 01**
காணியின் பெயர் : குருந்துவத்த; விபரம் : வீட்டுத்தோட்டம் மற்றும் நிரந்தரக் கட்டிடம் காணப்படுகின்றது; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : விஜேசூரிய ஆரச்சிகே பேமதாச, பெபொல்கஹவத்த, வலகெதர; விஸ்தீரணம் : 0.0127 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 25 ஆந் திகதி மு. ப. 9.30 மணிக்கு மதுகம பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 11 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஷியாமா பீ. காரியவசம்,
பிரதேச செயலாளர்,
மதுகம.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
மதுகம,
2018, மே 23.

6-573

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு
அமைச்சு இல. : 13/98/பிரீ/191.
எனது தொடர் இல. : டீஎஸ்டபிள்யுஏ/எல்என்டீ/4/ஏசீகியூ 1/எப் 1/20.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2003 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதிய 1272/14 ஆம் இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்படிருந்த அறிவித்தலானது பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது என பொது மக்களுக்கு இத்தால் அறியத்தருகிறேன்.

தென் மாகாணத்தில், அம்பாந்தோட்டை மாவட்டத்தில், கட்டுவன பிரதேச செயலாளர் பிரிவில், உத்துரு கிறுவபத்துவ சிறு பிரிவில், லீலந்தகொட கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் மா அதிபதியினால் தயாரிக்கப்பட்ட இ.கி.வ. இல. 216 இல் விபரிக்கப்பட்ட ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலம் :

**துண்டு இல. 1779**

காணியின் பெயர் : வூட்லான்ட்வத்தை ; விபரம் : வீட்டுத்தோட்டம், எந்தவித விவசாய செய்கைகளும் இல்லை ; உரிமை கோருபவர் : காணி சீர்திருத்த ஆணைக்குழு ; விஸ்தீரணம் : 0.096 ஹெக்டயார்.

**துண்டு இல. 1780**

காணியின் பெயர் : வூட்லான்ட்வத்தை ; விபரம் : திறந்த தரிசு நிலம் ; உரிமை கோருபவர் : காணி சீர்திருத்த ஆணைக்குழு ; விஸ்தீரணம் : 0.004 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக காணிக்கு 2018ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு வலஸ்முல்ல பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப் படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஐ. ஆர். கே. விதாரண,
பிரதேச செயலாளர்,
வலஸ்முல்ல.

பிரதேச செயலகம்,
வலஸ்முல்ல.

06-574

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு
அமைச்சின் குறிப்பு இல. : எல்டீ/5/2007/டபிள்யூஎஸ்/340.
எனது இல. : கேடீஎஸ்/எச்ஏஆர்/4/2/1/23.

2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆந் திகதிய 2053/09 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானி பத்திரிகையில் 7 ஆம் பிரிவின் கீழ் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 26 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்த வேண்டும்.

அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018ஆம் ஆண்டு மாச்சு மாதம் 26 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள் என குறிப்பிடப்பட்டிருந்தது. அதில் குறிப்பிடப்பட்டிருந்த திகதியும் நேரமும் 2018 ஆம் ஆண்டு யூலை 23 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு என திருத்தப்பட வேண்டும் என இத்தால் அறிவிக்கின்றேன்.

ஜே. எம். ஜே. கே. ஜயசுந்தர,
பிரதேச செயலாளர்,
ஹாரிஸ்பத்துவ.

பிரதேச செயலகம்,
ஹாரிஸ்பத்துவ,
2018, மே 16.

06-575

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.